LouisSaveinDupuisJournalofMultidisciplinaryResearch2024,3: 40-46 Doi.: 10.21839/lsdjmr.2024.v3.137

**Research Article**

# வையைப் பாடல்களில் மகளிர்

**அஸ்வதி. பா., ஜீவா. செ., ராஜஸ்ரீ. சி., சுஷ்மிதா. கு.**

**இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு**

**இம்மாகுலேட் மகளிர் கல்லூரி,**

**கடலூர்**

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் பாடலால் பெயர்பெற்ற நூல்கள் இரண்டு. ஒன்று கலித்தொகை. மற்றொன்று பரிபாடல். அகத்திணைச் செய்யுள்களுக்குப் பாடல் வகைகளாகக் கலிப்பாவையும் பரிபாடலையும் தொல்காப்பியர் கூறுகிறார். எல்லாச் சங்க இலக்கியங்களும் பலரால் பாடப்பட்டு தொகுக்கப்பட்ட நூல் தான். பரிபாடலும் பலரால் பாடப்பட்டு தொகுக்கப்பட்ட நூல். இதைப் பரிபாட்டு என்றும் கூறுவர்.

வையைத் தலைவியர்கள் கற்புக் காலத்தில் பிறர் காணக்கூடியவாறு தமது தலைவரோடு நீராடுகின்றனர். தலைவனோடு ஊடல் கொள்கின்றனர். தலைவனை ஊடலில் வையை ஆற்றில் தாக்குகின்றனர். இவை தவிர தலைவியின் தோழியர் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைப் பழித்துரைக்கின்றனர். தலைவி பரத்தையோடு நேடியாக வாய்த்தர்க்கம் புரிகின்றாள். தலைவன், தலைவி, தோழியர், கண்டோர் போன்றோரின் பல்வேறு கூற்றுகளும் செயற்பாடுகளும் வையைப் பாடல்களில் வருகின்றன. இவற்றை விவரிக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

---

## வையையின் வரவு

வையை கரை புரண்டு ஓடியதால் ஊரில் உள்ள அனைத்தும் மூழ்கியதை கண்டு ஊரே வையையை வைதது. அதிலும் கூட சிந்திக்க கூடிய அழகியலாக வையை பார்க்க எப்படி முடிந்ததோ இந்த ஆசிரியருக்கு.

**"களனி வந்து கால் கோர்தன**

**பலா வாளை பாலை உண்டன"**

(**பரி.** 6)

இந்த வரிகளைப் பார்க்கும் போது புலவனின் ரசிப்பு திறன் வெளிப்படுகிறது. வெள்ளத்தால் மூழ்கி ஊரில் மக்கள் அவதிப்பட்டு புலம்புகின்றனர். ஆடு மாடுகள்

எல்லாம் மூழ்கிப்போனது. அப்படி ஒரு துன்பகரமான சூழலிலும் வயலில் உள்ள கமுகு, தென்னை, முதலிய மரங்கள் கழுத்தளவு வெள்ளம் உயர்ந்ததால் அங்குள்ள பாளைகளை வயலில் இருந்த வாளை மீன்கள் உண்டன என்கிறார்.

**தைநீராடல்**

வையையில் தைநீராடல் பற்றிக் குறிப்பிடப்படுகிறது. திருமணமாகாத கன்னிப்பெண்கள் தங்கள் தாயாருடன் சென்று சடங்குமுறைகளை அறிந்த மூத்த பார்ப்பனியர் கூறியபடி நீராடுதல் தைநீராடல் எனப்படும். இவ்வாறு நீராடினால் அவர்களின் வேண்டுதல் பலிக்கும் என்ற நம்பிக்கை இருந்தது. எனவேதான் இப்பிறவியில் நீராடக் கிடைத்தது தாங்கள் முற்பிறவியில் செய்த பலன் என்றும் மறுபிறவியிலும் இப்பேறு நிலைக்கவேண்டும் என்று வேண்டுகின்றனர். இதனையே,

**“முன்முறை செய்தவத்தின்**
**இம்முறை இயைந்தேம்**
**மறுமுறை அமையத்தும் இயைக**
**நறுநீர் வையை நயத்தகு நிறையே”**
(**பரி.** 11: 138-140)

என்ற பாடல் வரிகள் எடுத்துக்காட்டுகின்றன. கல்வி கற்கத் தொடங்கும் இளம்புலவர் மை தடவப்பெற்ற சுவடிகளைக் கையிலேந்திப் பயிலும் மையாடல் பற்றிய செய்தியும் சொல்லப்படுகிறது.

வையையில் புதுவெள்ளம் வந்தால் அதை வரவேற்றுப் பூசித்து நீராடப் புகுவார்கள் மக்கள். பூசைக்கு வேண்டிய பண்டங்களைக் கையிலே ஏந்திக் கொண்டு வெள்ளத்தோடு வரும் வையையை நோக்கிப் போவார்கள். வையையைப் பூவால் அருச்சித்துத் தூபதீபம் காட்டி நிவேதனம் செய்து பொன் மீன் முதலியவற்றை அதனுள் இடுவது வழக்கம். அதனால் தூபத்துக்குரிய திரவியங்களையும் தீபத்தையும் தூபத்துக்கு வேண்டிய நெருப்பையும் ஏந்திச் செல்வார்கள். வையையாற்றில் புனல் விளையாட்டு புரிய பலர் செல்வார்கள். தமக்கு இன்பத்தை உண்டாக்கும் காதலர்களோடு புனலில் விளையாடுவது மிக்க இன்பத்தைத் தரும். அதற்காகக் காலையில் எழுந்து தம்மை அலங்கரித்துக்கொண்டு மகளிர் புறப்படுவார்கள். அவர்கள் தம் கையிலே மேலே சொன்ன பொருள்களை ஏந்திக்கொண்டு செல்வார்கள்.

உண்ணும் நீரையும் உணவை உண்டாக்கும் நீரையும் தந்து மாசு தீர ஆடும் நறும் புனலையும் வழங்குவதனால் வையையாறு

பூசை செய்வதற்குரியது. அந்த நீரால் அறம் மலியும். பொருள் மலியும். வீட்டு நெறிக்குரிய தூய்மை மலியும். அவற்றோடு காதலரும் காதலியரும் ஒன்றுபட்டு நீர் விளையாட்டு நடத்தும் இன்பச் செயல்களுக்கும் வையையின் புதுவெள்ளம் துணையாக இருக்கின்றது.

இவ்வாறு காதலுடையவர்களைக் காலையிலே அலங்காரம் செய்து கொள்ளும்படியாகச் செய்யும் வகையிலே வையை புது வெள்ளத்துடன் வந்தது. மழை பெய்து வையையில் வெள்ளம் வருகிறது. அதன்கண் விளையாடும் பொருட்டு மகளிரும் மைந்தரும் கோலம் புனைந்துகொள்ளப் போகிறார்கள். அவர்கள் நீர் விளையாட்டு நிகழ்த்தும் பொழுது தங்கள் தங்கள் காதலரோடு சேர்ந்து ஆடுவதனால் அவர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாகும். உடம்பு பூரித்துப் போகும். தோளிலே அணிந்திருந்த தோள் வளைகளாகிய வாகுவலயங்கள் அந்தப் பூரிப்பினாலே இறுகிப் போகும். அவை இறுகும்போது அவற்றை முன்கைக்குத் தள்ளினால் அங்கே அவை கலகலக்கும். மகிர் மார்பிலும் தோளிலும் சந்தனக் குழம்பால் கொடியின் உருவத்தை எழுதியிருப்பார்கள். அதற்குத் தொய்யில் என்று பெயர். அது உருவழிந்து போகும். அவர்கள் இடையிலே அணிந்திருக்கும் மேகலைகள் மணி உதிர்ந்து வெறும் வடங்களாக நிற்கும். நல்ல சுடரை வீசும் முத்துமாலைகள், அழிந்த சந்தனத்தோடும் மற்றப் பொருள்களோடும் கலந்து தம்முடைய ஒளிமங்கித் தோன்றும்.

மகளிர் தம்முடைய விரல் நகங்களில் சாயம் பூசியிருப்பார்கள். கன்னத்தில் செம்பஞ்சக் குழம்பால் பொட்டு இட்டிருப்பார்கள். சிலர் இலோசாகப் பூசியும் இருப்பார்கள். அந்தச் சாயமும் செம்பஞ்சக்குழம்பும் நீர் விளையாட்டில் கலந்துபோகும். மார்பில் சந்தனக் குழம்பு பூசியிருப்பார்கள். அதுவும் அழிந்து போகும். இந்த வண்ணப் பொருள்களும் சந்தனமும் நீரிலே கரைந்து வண்டலிடும். இப்படி நீர்விளையாட்டு இனிமேல் நிகழும்படியாக வையையிலே புனல் பெருகி வந்தது.

## புனல்விளையாட்டு

வையைப் பாடல்களில் இடம்பெறும் புனல் விளையாட்டில் பல்வேறு தலைவியர்கள் கற்புக் காலத்தில் பிறர் காணக் கூடியவாறு தமது தலைவரோடு நீராடுகின்றனர். தலைவனோடு ஊடல் கொள்கின்றனர். தலைவனை

ஊடலில் வையை ஆற்றில் தாக்குகின்றனர். இவை தவிர தலைவியின் தோழியர் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைப் பழித்துரைக்கின்றனர். தலைவி பரத்தையோடு நேரடியாக வாய்த்தர்க்கம் புரிகின்றனர். எனவே தலைவன், தலைவி, செரிப்பரத்தை, காமப்பரத்தை, தோழியர், கண்டோர், அறம் உரைக்கும் முதுபெண்டிர் ஆகியோரின் பல்வேறு கூற்றுக்களும் செயற்பாடுகளும் வையைப் பாடல்களில் வருகின்றன.

கூடா ஒழுக்கமாகிய பரத்தமை ஒழுக்கம் பழித்துரைக்கப்படும் செய்தியும் பரிபாடலில் இடம்பெறுகின்றது.

**“ஆயத்து ஒருத்தி அவளை அமர்காமம்**

**மாயப் பொய் கூட்டி மயக்கும் விலைக்கணிகை**

**பெண்மைப் பொதுமைப் பிணையிலி ஐம்புலத்தைத்**

**துற்றுவ துற்றும் துணை இதழ் வாய்த் தொட்டி”** (**பரி.** 20: 48-51)

எனத் தலைவிக்கும் பரத்தைக்கும் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தில் ஆயத்தார் ஒருத்தி பரத்தமை ஒழுக்கத்தை இழித்துரைக்கும் காட்சி எடுத்துக்காட்டப்படுகிறது. காம இன்பத்தை வஞ்சத்தோடு கூடிய பொய்மொழிகளோடும் சேர்த்துத் தன்னை நாடிவரும் காமுகரை மயக்கும் கணிகையைக் காமுகப் பன்றிகள் காம உணவு உண்ணுவதற்குரிய தொட்டியாக உருவகிக்கிறார் புலவர். இவ்வாறு பரத்தமை ஒழுக்கம் பழிக்கப்பட்டமையும் வையைப் பாடல்களில் எடுத்துக்காட்டப்படுகின்றன.

புனல் விளையாட்டை நடத்தச் செல்லும் மகளிர் பலர் வாகனங்களில் ஏறிச் சென்றனர். சிலர் யானையின்மேல் ஏறிச் சென்றனர். இன்னும் சிலர் ஆரவாரத்தையுடைய மெல்லிய நடையையுடைய குதிரையின் மேலே சென்றனர். அவர்கள் கையில் பல வகையான கருவிகள் இருந்தன. சிலர் புழுகு நெய்யை உள்ளே அடைத்த குழலை வைத்திருந்தார்கள். நீராடும்போது பிறர்மேல் அதிலிருந்து புலுகை வீசுவார்கள். இன்னும் சிலர் உள்ளே துளையையுடைய கொம்பிலே பனிநீரை நிரப்பிக்கொண்டு போனார்கள். வேறு சிலர் வெள்ளை நெட்டியாலான தெப்பக் கட்டையைக் கொண்டு போனார்கள். நீந்துவதற்கு ஏற்ற கருவி தெப்பக்கட்டை. இன்னும் சிலரே நீரிலே மிதக்கும்படியாக கெட்டியாலே தேரைப் போலச் செய்து வண்ணம் கொடுத்து அதைக் கொண்டு போனார்கள்.

**வையைப் பாடல்களில் மகளிர்**

பரிபாடல் வையைப் பாடல்களில் இடம்பெறும் மகளிர் பலதிறத்தவர். களவுத்தலைவி, கற்புத்தலைவி, தோழி, பரத்தையர், கண்டோர், பரத்தை இல்லத்தார், அறம்கூறும் முதுபெண்டிர் எனப் பலதிறத்துப் பெண்கள் வையைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளனர்.

வையைப் பரத்தையர்கள் தலைவனிடம் உரிமையோடு ஊடல்கொள்கின்றார்கள்.
தலைவியோடு நேரடியாகப் பூசலிட்டு தம்உரிமையையும் சாதுர்யத்தையும் வெளிப்படுத்து கின்றார்கள். வையைப் பாடல்களில் இடம்பெறும் பிற பெண்கள் தலைவிக்கு அறிவுரை கூறுகின்றவர்களாகவும் பரத்தைக்கு அறிவுரை கூறுகின்றவர்களாகவும் தலைவி தோழி பரத்தை பூசலை விலக்குகின்றவர்களாகவும் உள்ளனர்.

நீண்ட நெடிய வைகை ஆற்றின் கரையின் மற்றொரு பகுதியில் ‘பெண்டிர் தம் கணவருடன் ஊடிப் பின்கூடி மகிழ்ந்து நீராடுவர். மணமலர்களைச் சூடிப் புதுப்புனலை வாழ்த்திக் கைக்கூப்பித் தொழுவர். பல பெண்களும், ஆண்களும் தொடர்ந்து புனலாடியதால் சேறாகிய வையை நீர் முழுவதும் உண்டு உமிழ்ந்த எச்சில் போன்று தூய்மை இழந்து தோன்றியது’ என்று கூறுவர். இதனைப் புலவர்,

**“ஊடி ஊடி உணர்த்தப் புகன்று,**
**கூடிக்கூடி, மகிழ்வு மகிழ்வு,**
**தேடித்தேடி, சிதைபு சிதைபு,**
**சூடிச்சூடி, தொழுது தொழுது,**
**மழுபொடு நின்ற மலிபுனல் வையை,**
**விழுதகை நல்லாரும் மைந்தரும் ஆடி,**
**இமிழ்வது போன்றது இந்நீர்**
**குணக்குச் சான்றீர்!**
**முழுவதும் மிச்சிலா உண்டு” (பரி. திரட்டு:** 76-83)

என்று பாடுவர்.

மற்றோரிடத்தில், ‘நீராடுவோரின் சந்தனக் குழம்பும், ஆடவர் அணிந்த மாலையும், பெண்டிர் அணிந்த கோதையும், நீரில் கலக்கும் மலர்களின் நிறமாகவே வையை ஆறு தோன்றிற்று’ எனக்கூறுவர் இதனை,

**“சாந்தும் கமழ்தாரும் கோதையும் சுண்ணமும்**
**கூந்தலும் பித்தையும் சேர்ந்தன**
**பூவினும் அல்லால் சிறிதானம் நீர்நிறம்**
**தான் தோன்றாது இவ்வையை**
**ஆறு” (பரி.I திரட்டு:** 84 - 87)

எனப் பாடுவர்.

மற்றொரு பாடலில் மார்கழி மாதம் பெண்டிர் நோன்பு நோற்று தைநீராடிய முறைமையை நயம்பட எடுத்துரைக்கிறார். அதில், ‘முழங்கும் மேகங்களையுடைய கார்காலம் நீங்கக் குளிரால் நடுங்கும் பனிக்காலம் வந்தது. கதிரவன் கடுமையாகக் காயாததால் குளிர்ந்த பின் மழையுடையதுமான மார்கழி மாதத்தில் களங்கத்தோடு வளரும் முழுமதியின் திருவாதிரை நாளில் விரிந்த நூல்களைக் கற்று அந்தணர் விழாத் தொடங்கப் பார்ப்பனர் பூசைப் பொருட்களைப் பொற்கலத்தில் ஏந்த வளையல் அணிந்த கன்னிப் பெண்கள் வெயில் கொடுமையால் இவ்வுலகம் துன்புறாது, மழையால் குளிர்வதாக என வாழ்த்தித் தைந்நீராடினர்’ எனக் கூறுவர்.

**“கனைக்கும் அதிர்குரல்**
**கார்வானம் நீங்கப்**
**பனிப்படு பைதல் விதலைப்**
**பருவத்து,**
**ஞாயிறுகாயா நளிமாரிப்**
**பின்குளத்து**
**மாயிருந் திங்கள் மறுநிறை**
**ஆதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு**
**தொடங்கப்**
**புரிநூல் அந்தணர் பொலம்கலம்**
**ஏற்ப**
**வெம்பாதாக வியல்நிலை**
**வரைப்பென**
**அம்பா ஆடலின் ஆய்த்தொடிக்**
**கன்னியர்”** (**பரி. 11: 74 - 81**)

என்று பாடியுள்ளார் புலவர்.

தலைவியை பிரிந்து தலைவன் பரதையிரிடம் சென்று மேலும் போது அவனின் மேல் ஊடல் கொள்கிறாள் தலைவி. இதை குறிப்பிடும் ஆசிரியர்.

**"காதல்அம் காமம்**
**ஒருக்க ஒரு தன்மை நிற்குமோ?**
**ஒல்லைச்**
**சுருக்கமும் ஆக்கமும் - சூழ் உரல்! -**
**வையைப்**
**பெருக்கு அன்றோ? பெற்றாய்**
**பிழை"**

காமம் பெருக்கும் வையைப் பெருக்கு போன்றதே சிலரிடம் அன்பின் மிகுதி விரைந்து சுருங்குவதும் சிலரிடம் விரிந்து பெருகுவதும் இயல்பு. மழை பொழியும் கார்காலத்தில் வையையில் நீர் மிகுதியாகும் போது ஓடம் ஏறி வருவது காலத்தை தாழ்த்துகிறது. அதே சமயம் இளவேனில் காலத்தில் நாரை இரை தேடும் அளவிற்கு வையையில் நீர் சுருங்கி விடுகிறது. அதனால் இளவேனில் காலத்தில், உன் அன்புமிகுதியும் குறைந்து விடுகிறது என்று தலைவனை பார்த்து தலைவி கூறுவது. எத்தனை ஆழமாக உற்று நோக்க வேண்டி விஷயம் இதை அழகாக வையைக்கும் காமத்திற்கும்

ஒப்புமையுடன் கூறிய ஆசிரியரின் அறிவு கண்டு வியக்கிறேன்.

நீராடி முடித்த பெண்கள் தங்களை ஒப்பனை செய்வதற்கு முன்னர் கண்ணாடியைத் தூய்மைப்படுத்துவதற்கு நறுமணம் மிக்க நெய்யைப் பூசி வெண்மையான கற்பொடியிட்டுத் துலக்கித் தூய்மையாக்கி அக்கண்ணாடியில் தமது இயற்கையழகையும் செயற்கையழகையும் காதலருடன் புணர்ந்ததால் உண்டான ஒளியையும் கண்டு இன்பமடைகின்றனர். இந்த அரிய செய்தியும் பரிபாடல் ஊடாகப் புலப்படுகிறது.

**தலைவனின் நிலை**

முதல் நாள் வையை நீரில் தன் காமக்கிழத்தியோடு நீராடினான் தலைவன். அவன் மனைவி வீட்டில் இருந்தாள். அவனுக்குரிய காதற்பரத்தை ஒருத்தியும் இருந்தாள். அவனுடைய இல்லத்தின்கண் ஒருசார் வாழ்ந்து அவனுக்கு இன்பம் ஊட்டுபவளாக இருந்த இற்பரத்தையாகிய காமக்கிழத்தியோடு அவன் நீர்விளையாடி இன்புற்றான் என்ற செய்தி அவனுடைய காதற்பரத்தைக்கும் மனைவிக்கும் தெரிந்தது.

சேரியிலே வாழும் பொதுமகளிரான பரத்தையரோடு அளவளாவுவது தெரிந்தால் தலைவிக்கு ஊடல் உண்டாகும். இங்கே முதல் நாள் இற்பரத்தையோடு நீராடினான் என்ற செய்தியை உணர்ந்த காதற்பரத்தை தலைவனிடம் ஊடலுடையவளாக இருந்தாள். தலைவன் தளிரைக் கொண்துகொண்டு வந்து அவளுக்குக் கையுறையாகக் காட்டி வையையில் புனல் வந்த செய்தியையும் காதலர்கள் ஒன்றுபட்டு விளையாடும் விளையாட்டைப் பற்றியும் அவன் கூறினான். இதைக்கேட்டு கோபம்கொண்ட காதற்பரத்தை,

நான் பழையவள் பழைய பொருளிடம் சலிப்பு உண்டாவதும் புதிய பொருளிடம் மோகம் உண்டாவதும் உலக இயற்கை. என்றும் மாறாத புதுமையை உடையவரும் நின்னால் விரும்பப்படுவாருமாகிய மகளிருக்காக அல்லவா இதை நீ கொய்தாய்? அப்படி இருக்க அவர்களிடம் அளிக்காமல் என்னிடம் ஏன் கொண்டு வந்தாய். இப்போது மிகவும் நல்லவனைப் போல நீ பணிந்து தான் நிற்கிறாள். ஆனால் உன்னுடைய பழைய பண்பாகிய அன்பு முறிந்து விட்டது. முன்பெல்லாம் நீ தளிர் கொண்டு வந்து கொடுத்தபோது அது எப்படி இருந்ததென்பது எனக்குத் தெரியாதா? உன் அன்பு எப்படி இருந்ததோ அப்படி வளப்பமாக

இருந்தது. அப்போதெல்லாம் தளிரைக் கொய்தவுடனே எனக்குக் கொண்டு வந்து கொடுத்தமையால் அது துவளாமல் இருக்கும். இப்போதோ அது துவண்டிருக்கிறது. நீயே பார். யாருக்காகவோ இதைக் கொய்துகொண்டு சென்றாய். அவள் வேண்டாம் என்று மறுத்துவிட்டாள். அதை இங்கே கொண்டு வந்திருக்கிறாய். அங்கும் இங்கும் அலைந்ததனால் இது துவண்டு போயிற்று. உன் திருட்டுத்தனம் இப்போது எனக்கு வெளிப்பட்டுவிட்டது.

**“விளியா விருந்து விழுவார்க்குக் கொய்தோய்**

**தளிர் அறிந்தாய் தாம்இவை**

**பணிபு ஒசிபண்ப பண்டுஎல்லாம் நனிஉருவத்து**

**என்னோ துவள்கண்டீ**

**எய்தும் களவு இனி நின் மார்பில் தார்வாடக்**

**கொய்ததும் வாயாளோ? கொய்தழை கைபற்றிச்**

**செய்ததும் வாயாயோ செப்பு”** (**பரி. 20**)

என்று காதற்பரத்தை தலைவனிடம் வினவுகின்றாள்.

**முடிவுரை**

பண்டைத் தமிழ் இலக்கியங்களில் புகழையும் பாராட்டையும் பெற்றுள்ள வைகையாறு பழநி மலையில் தோன்றுகின்றது; அது மதுரை மாநகருக்குச் சீரையும், சிறப்பையும் வழங்குகின்றது; மதுரையைக் கடந்து கிழக்கு நோக்கிப் பாய்ந்துச் சென்று வங்கக்கடலோடு கலக்கின்றது. புனலாடச் சென்றவர்கள் செய்துகொண்ட ஒப்பனைகள் அவர்கள் ஏறி வந்த ஊர்திகள் புனலாட்டுக்குக் கொண்டு சென்ற பொருள்கள் புனலாடிய திறம் புனலாட்டுக்குப்பின் செய்த செயல்கள் ஆகியன அடுத்து பேசப்படுகின்றன. வையைப் பாடல்களின் தலையாய செய்திகளான அகப்பொருள்செய்திகள் பலநிலைகளில் அடுத்தடுத்து வருணிக்கப்படுகின்றன. இவ் அகப்பொருள் செய்திகளில் ஊடலும் கூடலும் முக்கிய இடம்பெறுகின்றன. தலைவன், தலைவி, பரத்தை போன்ற அகப்பொருள் மாந்தர்களின் செயல்களும் இடம்பெறும் பாடலாக வையைப் பரிபாடல்கள் உள்ளன.